DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 181/2015**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : அருமைநாயகம் |
| **Father's Name** | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 31.10.2023 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 31st October 2023.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 17.05.1990 தேதியிட்ட ராஜ் என்பவரிடமிருந்து கருப்பசாமி வகையறா பெற்ற அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 27.02.1995 தேதியிட்ட கருப்பசாமி வகையறாவிடமிருந்து 1ம் வாதி பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 1,2 மற்றும் 4 வாதிகளின் வீட்டு வரி ரசீதுகள் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** மின்கட்டண ரசீதுகள் 2 எண்ணம் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** பிராது பிளான் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** பிராதின் 2 வது தபசில் சொத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் குறுந்தகடுடன் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1 ஆகவும்**, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் **நீ.ம.சா.ஆ. 2 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது.

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**